Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 236

திங்கட்கிழமை
21 ஜூலை 2025

ஆடி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## உயர் அதிகாரிகளிடம் சிக்கிய கஞ்சா சிப்பாய்

பொலிஸாரிடம் ஒப்படைப்பு

விரிவு பக்:- 11

## உறங்கச் சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
உணவருந்திவிட்டு உறக்கத்துக்குச்சென்றவர் காலையில் சடலமாக 11

# செம்மணிப் புதைகுழியில் மீண்டும் இன்று அகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 21
அரியாலை, சித்துப்பாத்தி (செம்மணி) மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டப் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித என்பு எச்சங்கள் தென்பட்டதைத் தொடர்ந்து அங்கு அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நீதிமன்றக் கண்காணிப் 11



## செம்மணிப்புதைகுழி

## வழக்கைக் கையிலெடுத்தது குற்றப் புலனாய்வுப் பிரிவு

அகழ்வில் இன்று பிரசன்னமாவர்

விரிவு பக்கம்:- 11

# சம்பூரிலும் வெளிவந்தன மனித எலும்பு எச்சங்கள்

## மிதிவெடி அகற்றியபோது அதிர்ச்சி
## மனிதப் புதைகுழியா? என அச்சம்
## நாளைமறுதினம் அகழ்வு நடவடிக்கை

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை, சம்பூர் கடற்கரையை அண்மித்த பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் சில மனித என்பு எச்சங்கள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மூதூர் நீதிமன்ற பதில் நீதிபதியின் உத்தரவுக்கு அமைய நிறுத்தப்பட்டுள்ளதுடன், நாளை மறுதினம் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 10

## பொது எதிரணியை உருவாக்க திரைமறைவில் தீவிர பேச்சு

தமிழ்க் கட்சிகளுடன் பேசவும் திட்டம்

கொழும்பு, ஜூலை 21
பொது எதிரணியை உருவாக்குவதற்குரிய பேச்சுகள் தற்போது தீவிரமாக கொழும்பு அரசியல் களத்தில் நடைபெறுகின்றன.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்குத் திட்ட 11

## பாழடைந்த வீட்டில் இளைஞனின் சடலம்

போதைக்கு அடிமை எனத் தகவல்



யாழ்ப்பாணம், ஜூலை 21
போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமையான இளைஞர் ஒருவர் பாழடைந்த வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.
நண்பர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா 11

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலைத் தடுக்கத் தவறிய நிலந்தவின் வேலைக்கு வேட்டு

பொலிஸ் ஆணைக்குழு 'தடால்' முடிவு

கொழும்பு, ஜூலை 21
அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் 11

## வேலை பறிப்புப் போதாது வழக்குத் தாக்கல் அவசியம்

வலியுறுத்துகின்றது
கத்தோலிக்க ஆயர் பேரவை

விரிவு பக்கம்:- 10

## நிலந்தவைத் தண்டிக்காத மும்மூர்த்திகளுக்கு சிக்கல்

விசாரிக்கக் கோருகின்றது
கத்தோலிக்க ஆயர் பேரவை

விரிவு பக்கம்:- 11

## மூளாயில் இரு குழுக்கள் வெறிகொண்டு மோதல்!

கட்டுப்படுத்த பொலிஸ் துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 21
வட்டுக்கோட்டை, மூளாய் பிரதேசத்தில் நேற்று இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டிருந்த நிலையில், நிலைமையைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் எச்சரிக்கைத் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், மூவரைக் கைது செய்துள்ளனர். 11



'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்டது உண்மையாகுது கண்டியளோ'

## வீட்டாரை மிரட்டியவரின் விளையாட்டு விபரீதமானது

உடலில் தீப்பற்றி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
வீட்டிலிருந்தோரை மிரட்டுவதற்காக மதுபோதையில் தன்மீது பெற்றோல் ஊற்றியவர், உடலில் தீப்பற்றியதால் உயிரிழந்துள்ளார்.
நயினாதீவைச் சேர்ந்த குடும் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4138 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 03 35 48 54 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1205 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 12 32 42 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0164 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 1 7 2 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2244 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 05 26 32 58 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5896 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 5 2 6 1 3 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1926 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 12 19 21 56 |
| விசேட எழுத்து | E |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0471 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 6 1 3 8 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0012 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 28 33 36 |

# சிறைச்சாலைகளில் நெரிசல் உச்சம்

## *33,000ஐ கடந்த கைதிகள் எண்ணிக்கை*

**கொழும்பு, ஜுலை 21**
**நாட்டின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 17ஆம் திகதி நிலைவரப்படி 33 ஆயிரத்து 95 ஆக அதிகரித்துள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

வெலிக்கடை சிறைச்சாலையில் மட்டும் 750 பேர் தங்கக்கூடிய இடத்தில் 3,557 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.
கொழும்பு மகசின் சிறையில் 625 பேர் தங்கக்கூடிய இடத்தில் 2,985 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விளக்கமறியலில் உள்ளவர்கள் மட்டும் 2,426 கைதிகள். 385 கைதிகள் தங்கக்கூடிய இடத்தில் இவ்வளவு பேர் இருப்பது தீவிர நெரிசலை ஏற்படுத்தியுள்ளது. வெலிக்கட பெண்கள் சிறைச்சாலையிலும் 220 கைதிகள் தங்கக்கூடிய இடத்தில் 561 பெண் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# அரசு தவறிழைத்தால் மக்கள் விரட்டியடிப்பர்

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 21
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பயணம் தவறெனில், அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களே கடந்துள்ளன. எனவே, அரசாங்கத்தின் பயணம் சரியா அல்லது தவறா என்பதை ஒன்றரை வருடங்கள் சென்ற பின்னரே அறியக்கூடியதாக - உணரக்கூடியதாக இருக்கும்.
பயணம் சரியெனில் மக்கள் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். தவறான பயணமெனில் மக்கள் எதிர்ப்பை வெளியிடுவார்கள். நாட்டில் இன்னமும் உரிய மாற்றம் இடம்பெறவில்லை என்றே கருதுகின்றேன். பொருள்களின் விலை அதிகமாக உள்ளது. மக்களுக்கு வாழ்வதற்கு கஷ்டமாக உள்ளது- என்றார். (ச-44)

# ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்பதவிகளில் மாற்றம்

கொழும்பு, ஜுலை 21



அடுத்த தேர்தல்களில் வெற்றிபெறும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பலப்படுத்துவதற்காக அந்தக் கட்சியின் பதவிகளில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்று அந்தக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதன்படி கபீர் ஹாசிம்,திஸ்ஸ அத்தநாயக்க,முஜிபுர் ரஹ்மான்,தயாசிறி ஜயசேகர மற்றும் அஜித் பி பெரேரா ஆகியோரை உயர்பதவிகளுக்கு நியமிக்குமாறு அவர்கள் கூறியுள்ளனர்.
தற்போது பிரதான பதவிகள் வகிப்பவர்கள் வேறு பதவிகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.
இது நடக்காத பட்சத்தில் அமைப்பாளர்கள் என்ற அடிப்படையில் தாம் கடுமையான முடிவை எடுப்போம் என்றும் எச்சரித்துள்ளனர்.
கடந்த காலங்களில் கட்சி வீழ்ச்சியை நோக்கிப் பயணிப்பதற்குக் காரணம் திறமையானவர்களை உயர் பதவிகளில் அமர்த்தி அவர்களைக் கட்சியின் வெற்றிக்காகப் பயன்படுத்தாமையே.
இந்த நிலை மேலும் தொடர்ந்தால் கட்சி துண்டாடப்பட்டு சின்னாபின்னமாகிவிடும் என்றும் தொகுதி அமைப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-75)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0604 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 0 5 8 2 0 4 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2870 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 38 39 70 71 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 15 33 36 71 |
| வெற்றி வாரம் | 5031 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0730 |
| வெற்றி இலக்கம் | 02 35 36 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 10 35 48 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4582 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கம் | 14 18 22 35 |
| வெற்றி வாரம் | 2046 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 20.07.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 04 09 17 26 |
| வெற்றி வாரம் | 2696 |

# இயலாமையை மறைக்க பழிவாங்கும் படலம்

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 21
தமது இயலாமையை மூடிமறைப்பதற்காகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டின் தற்போதைய அரசியல் நிலை பற்றிக் கதைப்பதற்கு ஒன்றுமில்லை. மக்களின் பிரச்சினைகள் மூடிமறைக்கப்படுகின்றன. பழிவாங்கும் நடவடிக்கையை மட்டுமே அரசாங்கம் முன்னெடுக்கின்றது. மறுபுறத்தில் தமது இயலாமையை மூடிமறைப்பதற்காக அரச அதிகாரிகள் உட்பட மக்கள்வரை ஒடுக்கப்படுகின்றனர். அரிசி மாபியாக்களுக்கு முடிவு கட்டப்படும் எனக்கூறியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தனர். ஆனால் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது. இதுகூட விவசாயிகளைப் பழிவாங்கும் நடவடிக்கையாகும் - என்றார். (ச-44)

# எரிபொருள் சலுகைகள் எம்.பி.க்களுக்கு அதிகம்

கொழும்பு, ஜுலை 21
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் மற்றும் தொலைபேசி சலுகை 75 வீதம் வரை வழங்கும் நோக்கில் அவர்களிடம் இருந்து பெறப்படும் வருமான வரி அதிகளவு குறைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற வட்டாரம் தெரிவித்துள்ளது.
கொழும்பில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொந்த மாவட்டங்களின் தூரத்துக்கு ஏற்ப எரிபொருள் சலுகை முடிவு செய்யப்பட்டுள்ளது.
அதன்படி அதிக எரிபொருள் சலுகை கிடைப்பது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காகும்.
639 லீற்றர் என்ற அடிப்படையில் இப்போதையை எரிபொருள் விலைக்கு ஏற்ப கொடுப்பனவு வழங்கப்படுகிறது.
அதேபோல்,தொலைபேசி சலுகை உள்ளிட்ட ஏனைய வரிச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிசாளர்களைத் தவிர்க்கும் தேசிய மக்கள் சக்தி

யாழ்ப்பாணம், ஜூலை 21

**யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் அந்தந்தப் பிரதேச தவிசாளர்களை தேசிய மக்கள் சக்தியினர் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர் எனக் குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளது.**

கடந்த மாதம் , மறுமலர்ச்சிக் கான பாதைத் திட்டத்தின் கீழ், காங்கேசன்துறைநடேஸ்வராக் கல்லூரி வீதிப் புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வில் வலி. வடக்குப் பிரதேச சபை தவிசாளருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

அவ்வேளை அவ்விடத்துக்கு தவிசாளர் வருகை தந்த போதிலும், நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் தவிசாளரை புறக்கணித்தனர் எனக் கூறப் படுகின்றது.

அதேபோன்று கடந்த வாரம் நயினாதீவு பிரதேச மருத்துவ மனையின் வெளிநோயாளர் பிரிவுக்கான புதிய கட்டடத் திறப் புவிழாவில் வேலணைப் பிர தேசசபைத் தவிசாளர் புறக்க ணிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த ரின் துறவற நூற்றாண்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் புறக் கணிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத் திலும், தவிசாளர்களுக்கு இட ஒதுக்கீடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை.

இதுதொடர்பில் கூட்டத்தில் விச னம் தெரிவித்தபோது, அடுத்த கூட்டத்தில் உரிய இட ஒதுக்கீடு செய்து தருவதாக ஒருங்கி ணைப்புக்குழுவின் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருந் தார்.

பிரதேசங்களில் முன்னெடுக் கப்படும் அபிவிருத்தித் திட்டங் கள், நிகழ்வுகளில் பிரதேச தவிசாளர்களைப் புறக்கணித்து மத்திய அரசாங்கம் நேரடியாக தலையீடு செய்வது அநாகரி கம் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ச-20)

# காலநிலை மாற்றம் மக்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் நிலவும் வெப்பநிலை மாற்றத்துடன் மக்கள் உள நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் வீதம் அதிகரித் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மக்கள் மத்தியில் ஒருவித வைரஸ் காய்ச்சல் பரவிவருகின்றது. இதனால் மருத்துவமனையில் சேரும் நோயாளர் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

புவி வெப்பமடைதல் அதிகரித்துள்ளமை இதற்கான பிர தான காரணமென கராப்பிட்டிய போதனா வைத்தியசா லையின் உளநல விசேட மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார். (ச-இ)

# குற்றச்செயல்கள் 1,461 பேர் கைது

கொழும்பு, ஜூலை 21

திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் சோதனை நட வடிக்கைகளில் ஆயிரத்து 461 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட 810 பேரும் பகிரங்க பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட 621பேரும் உள்ளடங்குகின்றனர்.

பதில் பொலிஸ் மாஅதிபரின் ஆலோ சனைக்கு அமைவாக நாடு முழுவ தும் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புகளில் ஒரு வாரத்தில் 3283 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர் என்றும் பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜே பால தெரிவித்தார். (ச-இ)



# சிங்கப்பூரில் ராஜாவாக அர்ஜுன மகேந்திரன்

கொழும்பு, ஜூலை 21

மத்திய வங்கி பிணைமுறி மோச டியில் குற்றஞ்சாட்டப்பட்ட முன் னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், தற்போது சிங்கப்பூரில் உள்ள 'விஸ்டம் ஓக்' என்ற முன்னணி முதலீட்டு நிறுவ னத்தில் மூத்த பதவியில் உள் ளார் என்று இராஜதந்திர வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் இந்த நிறுவனத்தில் முத லீட்டு நிபுணராகப் பணியாற்றி வருகிறார் எனக் கூறப்படுகிறது.

நிறுவனங்கள் மற்றும் தனிநபர்க ளின் முதலீடுகளைக் கட்டுப்படுத் துதல், நிதி வளங்களை நிர்வகித் தல், பங்குச் சந்தை மற்றும் பத்திர முதலீடுகள் தொடர்பான ஆலோ சனை சேவைகளை வழங்குதல் ஆகியவை அவரது பிரதான பொறுப்புகளில் அடங்கும் என் பதை சமூக ஊடக அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. 2016இல் நிறுவப்பட்ட விஸ்டம் ஓக், சிங்கப் பூர் மற்றும் ஹாங்காங்கில் செயல்படுகிறது. நிறுவனம் தற் போது 7 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் முதலீடுகளை நிர்வகிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிறுவனத்துடன் அவர் செய்த பணிக்காக மகேந்திரன் பல சர்வ தேச விருதுகளை வென்றுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகி றது. இதேவேளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை விட் டுவிட்டு, பிணைமுறி மோசடி வழக்கை எதிர்கொள்ள சிங்கப்பூர் சென்ற மகேந்திரனை நாடு கடத்த அரசாங்கம் முயற்சித்த நிலையில் சிங்கப்பூர் இதுவரை அவரை ஒப்ப டைக்க மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றப்பிரிவின் பிரதானியாக விராஜ் தயாரத்ன

கொழும்பு, ஜூலை 21

சட்டமாஅதிபர் திணைக் களத்தின் குற்றப்பிரிவுப் பிரதானியாக சொலிசிட் டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன நியமிக்கப்பட் டுள்ளார்.

இதுவரை காலமும் அந் தப் பதவியிலிருந்த ரொஹாந்த அபேசூரிய மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சொலி சிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன நியமிக்கப் பட்டுள்ளார். (ச-இ)




## போவோமா ஊர்கோலம்?

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது. அப்பிடி ஆடிப் பாடாதவையையும் ஆடவைச்சு, அலுப்பெடுக்க வைக்கி றதுக்கெண்டே எங்கட ஆக்கள் சில ரெக்னிக்குகள் வைச்சிருக்கினம். அதில ஒண்டுதான் மசாஜ் றோட்டுகள். முந்தி எல்லா இடமும் இந்த மசாஜ் றோட்டுகள் இருந்தது. அந்த றோட்டில போறதே தனிச்சுகம் தான். அந்த சுகத்தில மெய்மறந்துபோய், றோட்டை விட்டுப் போகவே மனமில் லாம நிப்பினம். அதால ஒரு அரைக்கட்டை தாண்டவே அரைமணித்தியாலம் தேவைப்படும். யாழ்ப்பாணத்தில இருந்து காரைநகருக்கு போற றோட், நிலாவரையில இருந்து சுன்னாகத்துக்கு போற றோட், கொடிகாமத்தில இருந்து மந்திகைக்கு போற றோட் எண்டு முந்தி பேமஸான மசாஜ் றோட்டுக்கள் இருந்தது. ஆனால் உந்தப் பாழாப்போன காப்பெற் கலாசாரம் வந்ததில எங்கட பாரம்பரியமான மசாஜ் றோட்டுகளை நாங்கள் இழந்து போனம்.

எண்டாலும் மசாஜ் றோட் இல்லையெண்டு துவண்டுபோய் இருக்கிறவைக்கு "கவலைப்படாதையுங்கோ நாங்கள் இருக்கிறம்" எண்டு ஆறுதல் சொல்லுறதுக்கு எண்டு சில றோட்டுகள் இப்பவும் இருக்கத்தான் செய்யுது. இப்பிடி மசாஜ் றோட் தேவைப்படுறவை கண்ணைமூடிக்கொண்டு மீசாலை கனகம்புளியடிச் சந்தியில இருந்து வடமராட்சிக்கு வாற பக்கம் திரும்பினால் குருவிக்காடு மட்டும் நல்ல 'குசாலா' வரலாம். அந்த றோட்டையும் காப்பெற் கலாசாரம் விழுங்கப் பார்த்தது. கொஞ்ச இடத்தை காப்பெற் மூடியிருக் குத்தான். ஆனால் சில புண்ணியவான்களுக்கு இந்த மசாஜ் றோட்டின்ர அருமை பெருமை தெரிஞ்சதால காப்பெற் போடுற வேலையை அரைவாசியோட நிப்பாட்டினதால, இன்னும் அந்த றோட்டின்ர மகிமை கூடிட்டுது. காப்பெற்றுக்கு எண்டு கிண்டின கிடங்குகள், கொட்டின சல்லியளும் சேர்ந்து அதால போறவாறவையை ஒவ்வொரு செக்கனும் நாலைஞ்சு தரம் 'ஜம்ப்' பண்ண வைச்சு குதிரையில போற பீலிங்கைக் குடுக்குது. நாங்களெல்லாம் சோழர் பரம்பரையில வந்தாலும் இப்பத்தை காலத்தில குதி ரையில ஏறி ஓடியிருக்கமாட்டம். அப்பிடி குதிரையில போனாலும் கூட இருந்திட்டுதான் மேல 'ஜம்ப்' பண்ண வைக்கும். ஆனால் கனகம்புளியடியில இருந்து குருவிக் காடு மட்டும் போறவை மட்டுமில்லாமல் அவையின்ர வாகனங்களும் ஜம்ப் பண்ணி மேல பாய்ஞ்சு பாய்ஞ்சு போற அழகைச் சொல்லுறதுக்கு வார்த்தையே இருக்காது. புல்டோசர் போனாக்கூட அதில ஜம்ப் பண்ணாமல் போகஏலாதெண்டால் பாருங்கோவன். பயணம் முடிய உடம்பு முழுக்க எல்லா எலும்பும் கடகடத்துப்போய், தனிய கழட்டி வைச்சு எண்ணுற அளவுக்கு லேசாகிக் கிடக்கும்.

இப்பிடியான மசாஜ் சுகத்தை இன்னும் கூடுதலா அனுபவிக்க நினைக்கிறவை மாரிகாலம் தொடங்க அதால போய் வாங்கோ. கிடங்குகளுக்க நிக்கிற வெள்ளம் நீங்கள் ஜம்ப் பண்ணி விழேக்க பன்னீர் மாதிரி உங்களைக் குளிப்பாட்டும். அதோட வெள்ளம் எது, கிடங்கு எது எண்டு அந்த றோட்டில தேடிக்கண்டுபிடிக்க வைச்சு உங்கட மூளையையும், கண்ணையும் கூட மசாஜ் பண்ணலாம். எவ்வளவுதான் கண்டுபிடிச்சாலும், எப்பிடியோ ஏதும் ஒரு இடத்தில வெள் ளம் எண்டு நினைச்சு கிடங்குக்க விழுந்து நீந்தி விளையா டாமல் வரமாட்டியள். தேவையில்லாமல் இந்த றோட்டுக்கு காப்பெற் போட வெளிக்கிட்டாலும் அதை அரைகுறையோட கைவிட்டு, கடைசியில பூமியில ஒரு சொர்க்கபுரிமாதிரி இந்த மசாஜ் றோட் வாழுறதுக்கு வழிசெய்த அந்தப் புண் ணியவான்கள் எங்க இருந்தாலும் நல்லா இருக்கோனும் எண்டுதான் அதால போற எல்லாரும் கும்பிடுவினம் கண்டியளோ. ஆடலுடன் நீச்சலும் செய்து மசாஜ் பண்ணு வதுதான் சுகம் சுகம் சுகம்!

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு உண்டு.

**இடபம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் அல்லது நண்பர்கள் மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். சிலருக்கு நீண்டநாளாக முடியாமல் இருந்த தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். தாய்மாமன் வகையில் நீண்டநாளாக எதிர்பார்த்த உதவி இன்று கிடைக்கக்கூடும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை.

**கன்னி:** உடல்நலனில்கவனம்செலுத்தவேண்டிய நாள். சகோதரர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. சிலருக்கு திடீர் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வீண்செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்:** ஆனால், புதியமுயற்சி சாதகமாக முடியும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம்தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிப்பதால் மனதில் சோர்வு உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாக முடியும். தேவையான பணம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் மனச் சஞ்சலம் உண்டாகும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படக் கூடும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். முக்கிய முடிவில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு மகான்களின் அதிஷ்டானங்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்.

# மாடறுக்கும் மடுவம் விடயம் அரசியலாக்கப்படுகின்றது!

## வவுனியா மாநகர முதல்வர் பதில்

வவுனியா, ஜூலை 21

மடுவம் தொடர்பாக பல பிரச்சனைகள் உள்ளது! சபை கூடிமுடிவுகள் எடுக்கப்படும். இதனை அரசியல் ஆக்குவது பர்ஸ்சான் தலைமையிலான அரசியல் கட்சியே என்று வவுனியா மாநகர சபை முதல்வர் காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தாண்டிக்குளத்திலுள்ள மாடு அறுக்கும் மடுவத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக கருத்துக் கேட்டபோதே முதல்வர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா தாண்டிக்குளத்தில் உள்ள மாடு அறுக்கும் மடுவம் தொடர்பாக பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும். அங்கு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. தாண்டிக்குளம் மாடு அறுக்கும் மடுவத்தில் அதிகமான மாடுகள் அறுக்கப்படுகின்றன. அவை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசெல்லப்படுவதால் எமது மாவட்டத்தில் மாடுகளின் விலை அதிகரித்துள்ளது. கால்நடைகளுக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது. மடுவத்தில் அறுக்கப்படும் ஒரு கிலோ மாட்டு இறைச்சிக்காக சபைக்கு10 ரூபாவே கட்டணமாக செலுத்தப்படுகின்றது. கடந்த 25 வருடங்களாக இந்த தொகையே அறவிடப்படுகின்றது. ஆனால் தேறிய இலாபமாக குறைந்தது கிலோவுக்கு 800ரூபாவை அவர்கள் பெறுகின்றனர்.

எனவே இவற்றைத் திருத்திச் சபையின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அந்தவகையில் பர்ஸ்சானின் நடவடிக்கை தொடர்பாக மாநகரசபையின் அடுத்த அமர்வில் கூடி கலந்துரையாடப்பட்டு ஒழுக்காற்று முடிவுகள் எடுக்கப்படும் - என்றார். (ச-110)

# அலுமினியத் தொழிற்சாலைக் காணியில் விஷமிகள் தீவைப்பு

## போக்குவரத்தில் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

அல்லைப்பிட்டி அலுமினியத் தொழிற்சாலைப் பகுதி காணிகளில் காணப்பட்ட புதர்களுக்கு விஷமிகள் தீ வைத்தமையால் வீதியால் சென்ற மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது.

பற்றி எரிந்த புதர்களால் ஏற்பட்ட புகைமூட்டத்தால் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. போக்குவரத்தில் ஈடுபட்ட மக்கள் சுவாசிக்க முடியாத நிலையும் ஏற்பட்டதுடன் வீதியால் சென்ற சிலர் விபத்துக்குள்ளாகி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக பிரதேசசபை தவிசாளருக்கு அறியப்படுத்தியதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கையில் யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்படுத்தப்பட்டது. (ச-20)




# பாஷையூர் வடிகால் சரிசெய்ய ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் பாஷையூர் 19ஆம் வட்டாரத்தில் பொது மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் பிரதான வடிகால் மீது அமைக்கப்பெற்றிருந்த பாலம் அண்மையில் ஏற்பட்ட கடுமையான காற்று - புயல் காரணமாக தகர்ந்தமையால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தை வட்டாரத்தின் மாநகரசபை உறுப்பினர் ஜொனி தனிஸ்ரன், மாநகர முதல்வரின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து மாநகர முதல்வர் குறித்த பகுதிக்குச் சென்று அவற்றைச் சரிசெய்வது தொடர்பில் பரிசீலிப்பதாகக் குறிப்பிட்டார். (ச-66-20)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய சுவர்ணாம்பிகை அம்மன் ஆடிப்பூர மஹோற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் மேற்படி ஆலய மஹோற்சவம் இடம்பெறும். (ச-66)



## சாதாரணதரப் பெறுபேற்றில்

# சித்திவிநாயகர் வித்தியாலய மாணவி சங்கீதா சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 21

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலய மாணவி சங்கீதா ரமேஷ் அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண பரீட்சையில் 9ஏ சித்தியைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 9ஏ தர சித்தியை அவர் பெற்றுக்கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


நாளொரு நல்வார்த்தை

சிறிதளவு நெருப்பு சிறிதளவு வெப்பத்தையே தருவதைப் போல, பலவீனமான ஆசைகள் பலவீனமான விளைவுகளையே தரும்.

– நெப்போலியன் ஹில்–

## தவறான முன்னுதாரணம்!

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலையொன்றின் மாணவர்கள், நீண்ட நாள்களாக வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலையில் ஏற்பட்டிருந்த உள்ளகப் பிரச்சினைகள் மற்றும் ஆசிரியர் ஒருவர் அதிபருக்கு எதிராக வழங்கிய முறைப்பாடுகளைத் தொடர்ந்து, அந்த அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த இடமாற்றத்தைக் கண்டித்தும், ‘தமது’ அதிபரை மீள்நியமனம் செய்யவேண்டும் என்று வலியுறுத்தியுமே மாணவர்கள் இந்த வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ‘அதிபரை மீள் நியமனம் செய்யாவிட்டால், கல்வி எமக்குத் தேவையில்லை’ இதுதான் இந்தப் போராட்டத்தின் மூலம் மறைமுகமாகச் சொல்லப்படும் ஆபத்தான செய்தி.

மாணவர்களின் கோரிக்கை மிகவும் நியாயபூர்வமாக இருக்கலாம், மாணவர்களின் கல்வியிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும், ஆளுமை விருத்தியிலும் அந்த அதிபர் தவிர்க்க முடியாத பங்களிப்பை வழங்கியதால், அவர் தமக்கு இன்றியமையாதவர் என்ற எண்ணம் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அல்லது அதிபருக்கு எதிரான முறைப்பாடு பழிவாங்கும் நோக்குடையது என்பதால் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் அறச்சீற்றமும் ஏற்பட்டிருக்கலாம். இவை எதையும் மறுப்பதற்கில்லை. ஆனால், தமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக மாணவர்கள் தேர்ந்தெடுத்த போராட்ட வடிவம் மிகவும் ஆபத்தானது என்பதுடன், அதை ஏற்கவும் முடியாது.

அதிபருக்கு நீதியைக் கோருவதற்கு பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், ஆளுநர் அலுவலகம், நீதிமன்றம், மத்திய அரசாங்கம் என்று எத்தனையோ வழிமுறைகளும், படிநிலைகளும் உள்ளபோது, அதிபர் வந்தால்தான் பாடசாலைக்கு வருவோம் எனப் போராடுவது பொருத்தமற்றசெயல். மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட வேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஆனால், போராட்ட வடிவத்தை மாற்றவேண்டியது மிகவும் அவசியம்.மாணவர்கள் என்போர் பக்குவப்படாதவர்கள். ஆதலால், இந்த விடயத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் கனதியான வகிபங்கை ஆற்றி அவர்களை வழிப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால், மாணவர்களைப் பணயக்கைதிகளாக்கியுள்ள நிலையைத்தான் அவதானிக்க முடிகின்றது. இது அபத்தமானது. ஓரிரு வாரத்தில் அந்த அதிபர் திரும்பவும் நியமனம் செய்யப்பட்டால், இடைப்பட்ட ஒருமாதகாலக் கற்கைநெறிக்கு யார்பொறுப்பு? பாடத்திட்டங்கள் முழுமையாகக் கற்பிக்கப்படும் என்பதற்கு யார் உத்தரவாதம்? ஏனைய பாடசாலைகளின் மாணவர்களுடன், சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்கள் போட்டியிட முடியாத நிலை ஏற்படும். இந்த இடைவெளியை எவர் நிரப்புவார்கள்?. கல்விக் கட்டமைப்பில் மாணவர்களைப் பணயம் வைப்பதும், போர்க்களத்தில் பொதுமக்களைப் பணயம் வைப்பதும் ஒன்றுதான். இரண்டுக்கும் அவ்வளவு பெரிய வேறுபாடுகள் என எவையும் இல்லை.




## ஒரு வகுப்பறையில் இனி 25 -30 மாணவர்களே!



புதிய கல்விச்சீரமைப்பில் நடவடிக்கை

**கொழும்பு, ஜூலை 21**

**50 அல்லது 60 மாணவர்களைக் கொண்ட நெரிசலான வகுப்பறைகளில் தரமான கல்வியை வழங்குவது சாத்தியமில்லை என்பதால், ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை 25 முதல் 30 வரை குறைக்க கல்வி அமைச்சகம் இலக்கு வைத்துள்ளது என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

புதிய சீர்திருத்தங்கள் பாடத்திட்டப் புதுப்பிப்புகளுக்கு அப்பாற்பட்டவை. ஆசிரியர் தொழில்முறையை மேம்படுத்துதல், கல்வி நிர்வாகத்தை மறுசீரமைத்தல் மற்றும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்காக உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளின் அடிப்படையில் இந்தச் சீர்திருத்தங்கள் திட்டமிடப்பட்டன என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (ச-இ)

## யானைகள் வாழ்விடமாக சஹ்ரானின் நிலம்

கொழும்பு, ஜூலை 21

ஈஸ்டர் தாக்குதல்களின் மூளையாகச் செயற்பட்ட சஹ்ரானுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் மாத்தளை, மஹாவெல காவல் பிரிவின் கெட்டவல, ஹத்தமுங்கல பகுதியில் அமைந்துள்ள 21 ஏக்கர் நிலம் காட்டு யானைகளின் வாழ்விடமாக மாறியுள்ளது.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் புத்தசாசன மத மற்றும் கலாசார விவகார பிரதி அமைச்சருமான கமகெதர திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இந்த விடயம் தெரியவந்தது. (ச-இ)

## மாகாணச் செயலர்கள் கொழும்புக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 21

நாட்டின் அனைத்து மாகாணச் செயலாளர்களும் அடுத்த வாரம் கொழும்புக்கு அழைக்கப்படவுள்ளனர் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த 6 மாதங்களின் மீளாய்வு தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் மாகாணங்களின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர், பேராசிரியர் சந்தன அபயரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

## கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாதீர்

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையைக் கருத்திற்கொண்டு, கடலுக்குச் செல்வதை முற்றிலுமாகத் தவிர்க்குமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த கடற்றொழிலாளர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். வளிமண்டலவியல் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, காற்றின் வேகம் மணிக்கு 60-70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். கடல் அலைகள் 2.5 முதல் 3 மீற்றர் வரை உயரக்கூடும். எனவே, மறு அறிவித்தல் வரும் வரை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## 40 வீத பொலிஸாருக்கு தொற்றாநோய்ப் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 21

பொலிஸ் அதிகாரிகளில் சுமார் 40 சதவீதமானோர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிக சலுகைகளை வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



நாளை 22.07.2025

செவ்வாய்க்கிழமை - ஆடி 06

சுபநேரம் : 10.31 - 12.01

ராகுகாலம் : 03.01 - 04.31


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டை உள்வாங்காத தேசியவாதம் குறைகுடமே!

பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜுலை 21**

**விடுதலைக்காகப் போராடும் இனமொன்று மக்களை எழுச்சி கொள்ளவைத்து ஒருங்கிணைப்பதற்காக தேசியவாதத்தை முன்னிலைப்படுத்த தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் மொழி, நிலம் பற்றிப் பேசுகின்ற அளவுக்கு பண்பாட்டைக் கருத்திற் கொள்ளுவதில்லை. பண்பாட்டை உள்வாங்காத தேசியவாதம் முழுமை பெறாது. இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நடத்திய ஆடிப்பிறப்பு விழாவில் அதன் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஓர் இனத்தின் தனித்துவமான பண்பாட்டின் வெளிப்பாடுகளாகவே விழாக்களும் பண்டிகைகளும் அமைகின்றன. தமிழ்மக்களின் அறிவு ரீதியான காலக் கணிப்பீட்டையும், பகிர்ந்துண்ணும் ஆரோக்கிய உணவுப் பண்பாட்டையும் பறைசாற்றுகின்ற பண்டிகைகளாகத் தைப்பொங்கலும், ஆடிப்பிறப்பும் கொண்டாடப்படுகின்றன.

தமிழ்ப்பண்பாடு ஒருபுறம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினாலும், இன்னொருபுறம் உலகமயமாக்கலினாலும் அதன் அடையாளத்தை இழந்து கொண்டிருக்கிறது. இவற்றோடு எமது அக்கறையின்மையினாலும் நாம் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வந்த பண்பாட்டு விழுமியங்களும், பாரம்பரிய விழாக்களும் கைவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு தேசிய இனத்தின் தரத்தை மதிப்பீடு செய்யும் அளவுகோல்களில் அது பேசும் மொழி, அதன் வாழிடம் என்பனவற்றுக்கு நிகராக அதன் தனித்துவமான பண்பாடும் உள்ளது. இதனைத் தமிழ்த்தேசிய அரசியல் தலைமைகள் கருத்தில் எடுத்துப் பண்பாட்டுச் செயற்பாடுகளை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கு முன்வரவேண்டும் - என்றார். (ச-66)



## துர்நாற்றத்துடன் கழிவுநீர் வெளியேற்றம்

### யாழ்.நகர உணவகம் மீது வழக்குத்தாக்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 21

யாழ்.நகர தாராக்குளம் பகுதியிலுள்ள உணவகமொன்றிலிருந்து துர்நாற்றத்துடன் வெள்ள வாய்க்காலுக்குள் கழிவுநீர் வெளியேற்றப்பட்டமை தொடர்பாக குறித்த உணவகத்துக்கு எதிராக யாழ். மாநகர சபையின் சுகாதார பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த உணவகத்திலிருந்து கழிவுநீர் துர்நாற்றத்துடன் வெள்ளவாய்க்காலில் வெளியேற்றப்படுவது கடந்த பல மாதங்களாக நீடித்து வருவதாக மக்களால் முறையிடப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் வட்டார உறுப்பினர் இரத்தினம் சதீஸ் அவ்விடத்துக்குச் சென்று கழிவுநீர் வெளியேற்றப்படும் வெள்ளவாய்க்கால் பகுதியை பார்வையிட்டார். இதுதொடர்பில் உடனடியாக யாழ். மாநகரசபையின் முதல்வர் திருமதி.மதிவதனி விவேகானந்தராசாவைத் தொடர்புகொண்டும் தெரியப்படுத்தினார்.

அதனையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்து சென்ற யாழ்.மாநகரசபையின் சுகாதாரக்குழு உணவக முகாமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-66)

## பொதுக்கூட்டம்

கொழும்பு, ஜுலை 21

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இணையத்தின் தலைவியின் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 9 மணியளவில் 1008 சங்காபிஷேகத்தை தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று மதியம் 12 மணியளவில் அடியார்களுக்கு உபயகாரர்களால் அன்னதானம் வழங்கப்படும். மாலை 7 மணிக்கு வசந்த மண்டப தீப ஆராதனைகள் நடைபெற்று வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் விநாயகர் சகிதமாக உள் வீதி வெளி வீதி வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறும். விசேட நிகழ்வாக இரவு உற்சவத்தில் உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் குழுவினரின் தவில் நாதஸ்வர இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ச)



## வீதி, பாலம் சீரின்மையால் பனைநின்றான் மக்கள் அவதி

வவுனியா பனைநின்றான் கிராமமக்கள், தமது கிராமத்துக்குச் செல்லும் வீதி, பாலம் என்பன சீரின்றிக்காணப்படுவதால் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர். ஒட்டுசுட்டான் நெடுங்கேணி பிரதான வீதியிலிருந்து பனைநின்றான் கிராமத்துக்குச் செல்லும் குறித்த வீதி மிகமோசமான நிலையில் காணப்படுவதோடு மரப்பாலத்தைக் கடந்துசெல்வதிலும் மக்கள் இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றனர். மழைக்காலங்களில் குறித்த பாலத்தினூடாக முற்றாகப் போக்குவரத்து செய்யமுடியாதநிலை ஏற்படுகின்றது. இந்தப்பாலம் புதுக்குடியிருப்புப் பிரதேசசபைப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணப்படுகின்றது. எனவே குறித்த பாலத்தையும் அதனோடு இணைந்த வீதியையும் சீரமைத்து, தமது போக்குவரத்தைச் சீர்செய்யுமாறு பனைநின்றான் கிராமமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் பனைநின்றான் கிராமமக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து இடர்பாடுகள் தொடர்பில் நேரடியாகச்சென்று ஆராய்ந்தார். (ச-26-246)





## நல்லூர் மஹோற்சவத்துக்காக அலங்காரப் பந்தல்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 21

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் விசுவாவசு வருட மஹோற்சவப் பெருந்திருவிழா எதிர்வரும்29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 25 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மிகவும் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஆலயத்தை அண்டிய பகுதிகளில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கும் பணிகள் தற்போது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-66)

## பல இலட்சம் ரூபா பெறுமதியான படகு, இயந்திரத்துக்குத் தீவைப்பு

### விடத்தல்தீவில் விஷமிகள் அட்டூழியம்

மன்னார், ஜுலை 21

மன்னார் விடத்தல்தீவு கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான படகு,வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை தீவைத்து எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

விடத்தல் தீவு கடற்கரையில் கடந்த சில தினங்களாக நிறுத்திவைக்கப்பட்ட மீன்பிடிப் படகின் வெளி இணைப்பு இயந்திரம் இனந்தெரியாத நபர்களால் இரவு நேரங்களில் கடலில் தூக்கி வீசப்பட்டு வந்த நிலையில், குறித்த வெளி இணைப்பு இயந்திரங்களை மீட்டு மீனவர்கள் கடல் தொழிலுக்குச் சென்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீண்டும் தொழிலுக்குச் செல்ல குறித்த படகின் உரிமையாளர் கடற்கரைக்குச் சென்றபோது படகைக் காணவில்லை.

இதன்போது குறித்த படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை சற்று தொலைவில் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் அடம்பன் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலுடன் பிள்ளையான் தொடர்பு

*விசாரணைகளைத் துரிதப்படுத்துக சரத் வீரசேகர வலியுறுத்து*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தாரெனில் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, தகவல்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஹ்ரான் மற்றும் நௌபர் மௌலவி ஆகியோரே பிரதான சூத்திரதாரிகள். இவர்களில் சஹ்ரான் இறந்துவிட்டார். எப்.பி.ஐ., இன்டர்போல் ஆகியவற்றுக்குக்கூட கண்டுபிடிக்கமுடியாமல்போன பிரதான சூத்திரதாரியொருவர் இருந்தால், அவர் பற்றி தகவல் வெளியிடாமல் இருப்பது ஏன்? இது பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களை அவமதிக்கும்செயல் என்றே நான் கருதுகின்றேன்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின்போது ஷானி அபேசேகர சேவையில் இருந்தார். தற்போது அவருக்கு மீண்டும் பதவி வழங்கப்பட்டுள்ளது. எனவே, எப்படியான பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்கின்றார்கள் எனப் பொறுத்திருந்து பார்ப்போம் - என்றார். (ச-44)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப்பெயர்மாற்றமும் அதன் ஒருங்கிணைப்பும்

சாவகச்சேரி நகராட்சி மன்ற ஆளுகைக்குட்பட்ட வட்டாரம் - 06, யாழ் வீதி, 135/1, 135/2 எனும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் சிவஞானம் பெண் செல்வராணி என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை நுணாவில் கிழக்கு, நுணாவில் மாணிக்கம் தியாகராஜா அல்லது கனகராசா பெண் கண்மணியின் மகளான சின்னத்துரை மருதப்பு பெண் செல்வராணிக்கு பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் டானியல் சிவகுரு முன்பாக, 5764/10.10.1966 இலக்க உறுதி மூலம் சீதனமாக வழங்கியுள்ளார். மேலும் நுணாவில் கிழக்கு மாணிக்கம் கனகராசா மகள் செல்வராணி அதே இடத்தை சேர்ந்த மாணிக்கம் கனகராசா மகள் தங்கராணிக்கு பிரசித்த நொத்தாரிசு S.P மயில்வாகனம் முன்னிலையில் அறுதி உறுதி இலக்கம் 3877 /07.05.1980 மூலம் அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் செல்லையா சத்திய சீலன் பெண் சிவாஜினி என்பவர் தனது தாயார் 2022ஆம் ஆண்டு மார்கழி மாதம் மரணமடைந்துள்ளதாகவும் தனது தாயாரின் ஆதனம் தனக்கே முழு உரித்து உள்ளதெனவும் தானே ஒரே ஒரு வாரிசு எனவும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 575/14.11.2023 மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் சுகுமார் அனுசன், சுகுமார் பிரியா ஆகியோர் தங்களின் காலஞ்சென்ற தாயாராகிய செல்வராணியின் ஆதனம் என வெளிப்படுத்தி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 570/12.10.2023 மூலம் நன்கொடையாக மேற்குறித்தவர்களின் சகோதரியாகிய செல்லையா சத்தியசீலன் பெண் சிவாஜினிக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் செல்லையா சத்தியசீலன் பெண் சிவாஜினி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 602/29.06.2024 மூலம் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துவதாவது.

**ஆதன விபரம்**

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட J/307 நுணாவில் மத்தி கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட "பாவட்டங்காடு வளவு" என்ற ஆதனம் ஆனது எங்களின் 2ஆம் பெயரின் தாயாராகிய செல்வராணி என்பவரிற்கு பிரசித்த நொத்தாரிசு இ.டா.சிவகுரு முகதாவில் 1966.10.10ஆம் திகதி 5764ஆம் இலக்கத்தில் முடித்த சீதன உறுதி மூலம் எனது தாயாருக்கு வந்தடைந்தது எனவும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 575/14.11.2023 வெளிப்படுத்தல் உறுதி மூலம் என்னை வந்தடைந்தது எனவும் இதே நொத்தாரிசு முகதாவில் உறுதி இல 570/12.10.2023 மூலம் நன்கொடையாக என்னை வந்தடைந்தது என்றும் விபரித்துள்ளார்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப்பகுதி, சாவகச்சேரி கோயிற்பற்று நுணாவில் இறை, சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு, J/307 நுணாவில் மத்தி கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட "பாவட்டங்காடு வளவு" வீடும் பயிர் வகைகளும் நிலப்பரப்பு 3 குழி 10 1/2 விஸ்தீரணமுடைய காணியும் வீடும் செய்பயிர்களும் இது தற்போது நில அளவையாளர் ஏ.அருள்நேசன் அவர்களால் 28.04.2024ஆம் திகதி 5049ஆம் இலக்க படத்தில் துண்டு 1 நிலப்பரப்பு 2 குழி 10.41 இந்த நிலப்பரப்பு இரண்டு குழி பத்து தசம் நான்கு ஒன்றுக்கும் எல்லை

கிழக்கு ஜெயபாலசுந்தரம் கஜானனின் ஆதனம்

வடக்கு - ஜெயபாலசுந்தரம் கஜானனின் ஆதனம்

மேற்கு - ஒழுங்கை


தெற்கு - ஒழுங்கை

இதடங்கலும் இதன் கிழக்குப்பக்கமாக விஸ்வலிங்கம் பெண் தங்கம்மாவின் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீரப்பங்கும் கந்தையா பெண் சின்னம்மாவுக்கும் விசுவலிங்கம் பெண் தங்கம்மாவுக்கும் உரிய காணிக்கூடாக வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதைச்சேர்ந்தவைகளும்.

தற்போது ஜெயபாலசுந்தரம் கஜானன் பெண் சிந்துஜா சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் நிறைவேற்றிய 606/24.07.2024 ஆம் இலக்கம் உறுதி மூலம் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக ஆதன ஒருங்கிணைப்பிற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதன உரிமையாளரது பெயரிற்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்தவும் ஆதன ஒருங்கிணைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புத் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி**

# மரண அறிவித்தல்



தோற்றம்
13 . 10 . 1955

மறைவு
18 . 07 . 2025

## செல்வராசா விஜயமலர் (ஔவை)


நுணாவில் மேற்கு மணங்குணாய் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா விஜயமலர் (ஔவை) அவர்கள் கடந்த (18.07.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் இளையபுதல்வியும், காலஞ்சென்ற மாணிக்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்ரி, சறோஜினி தேவி, மற்றும் அன்னலட்சுமி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, இராசரத்தினம், சிவபாதம், சின்னராசா ஆகியோரின் மைத்துனியும், செல்வரஞ்சன், செல்வரமணன், செல்வரூபன், சுஜித்தா, செல்வமதுரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புனிதா, சுதர்ஷினி, யசிந்தா, பிரசாந்தன், குசேலினி ஆகியோரின் மாமியாரும், சந்தோஸ், சபர்ணா, சங்கவன், வருணியா, காவியா, கவிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2025) செவ்வாய்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26 . 07 . 1929

மறைவு
13 . 08 . 2023

## அமரர் சுப்ரமணியம் கனகசபாபதி

**(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்)**

ஈராண்டு நிறைவானது
எமது குலதெய்வம் அமரராகி
விழிகளின் ஈரம் இன்னும் காயவில்லை
எம் மனதில் நீ என்றும் சிரஞ்சீவி...
ஓம் சாந்தி சாந்தி சாந்தி...

குடும்பத்தினர்

(CS 58900) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதைபந்தாட்டச்சமர்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 21
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்டச்சமர் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தின் 48 முன்னணி விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் முதல்நாள் ஆட்டத்தில் "பி" பிரிவில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும், எவரெஸ்ற் விளையாட்டுக்கழகமும் மோதின. போட்டியில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமநிலையிலிருந்தன. எனினும் இரண்டாம் பாதியாட்டத்தில் மேலும் 4 கோல்களைப் போட்டு 5:2 என்ற கோல் கணக்கில் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற "ஏ" பிரிவிற்கான போட்டியில் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகமும், நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதின. ஆட்டமுடிவில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ச-41-27)



# உடுவில் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 21
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா மருதனார்மடம் வட இலங்கை சங்கீதசபை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலாளர் பா. ஜெயகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் திருமதி.லாகினி நிருபராஷ், மதிப்புறு விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி.சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)

# நம்பிக்கையின் சிறகுகள் புத்தக வெளியீட்டு விழா

மன்னார், ஜூலை 21
மன்னார் பேசாலையைச் சேர்ந்தவரும் மன்.சென். பற்றிமா மகாவித்தியாலய பழையமாணவியும் தகவல் தொடர்பாடல் பட்டதாரியுமான டிவன்சி மாக்கஸின் 'நம்பிக்கையின் சிறகுகள்' 'விங்கிஸ் ஒவ் ஹோப்' என்ற ஆங்கிலக் கவிதைத்தொகுப்பின் நான்காவது புத்தக வெளியீட்டு விழா பேசாலை சென். பற்றிமா மகாவித்தியாலயத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. (ச-41-60)









தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு விழா நாவற்குழி முத்தமிழ் சனசமூக நிலைய முன்றலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், கலை, இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை. சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,66)

# சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 21
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் சித்திரக் கண்காட்சி அதிபர் த.பாலசுப்பிரமணியம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.ராஜன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்விவலய தமிழ்ப் பாடப் பிரதிக் கல்விப்பணிப்பாளரும் சாவகச்சேரிக் கோட்டக்கல்விப்பணிப்பாளருமான பல.பரணீதரன், தென்மராட்சிக் கல்விவலய அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி வி. ஆரியரட்ண, கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியரான செ.இ.மகேந்திரன் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-41-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
04 . 11 . 1953



மறைவு
23 . 06 . 2025

கடந்த 23.06.2025 அன்று
இறைபதமடைந்த எமது குடும்ப தலைவி

### செல்வேந்திரன் நகுலாம்பிகை

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.07.2025) திங்கட்கிழமை சாட்டி புனித தீர்த்தக்கரையில் காலை 07.30 மணியளவில் நடைபெற்று 23.07.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகர நிகழ்விலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் பிரவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலமும் தமது அனுதாபங்களை பகிரந்தோருக்கும் இன்னும் பல வழிகளில் உதவிய அயலவர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவுடன் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வேலணை வடக்கு, 5ம் வட்டாரம்
நெசவுசாலை வீதி, வேலணை

குடும்பத்தினர்
077691 7157
077 507 5431

(ES 58911) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 11 . 1950



மறைவு
20 . 07 . 2025

### நல்லையா ராஜரட்ணம்

**(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் வடக்கு மற்றும் கோண்டாவில் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா ராஜரட்ணம் அவர்கள் நேற்று (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - கண்மணி தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் ரத்தினேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், நாகயசோதாதேவி (யசோ) அவர்களின் அன்புக்கணவரும், பிரதீபா, பிரகாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜகுமார், துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஷ்ணுகா, தரணிகா, எழிலினி மற்றும் ஹரிஷ்ணவியின் பேரனும் அன்னலட்சுமி, செல்வரட்ணம், விஜயரட்ணம் மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தயாபரன், சரோஜாதேவி, பத்மதேவிகா, கிருஷ்ணகுமார், ஜகதீஸ்வரி மற்றும் கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு இல்லத்தில் இன்று (21.07.2025) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 937 3196, 077 238 4121

(CS 58909) E

## 1 ஆம் ஆண்டு நீங்கா நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 01.08.2024 அன்று இறைபதம் அடைந்த
எமது அன்புச் செல்வம்

### அமரர் யோகலிங்கம் அருள்காந்



எம் உயிருக்குள் உயிரான செல்வமே காந்து!
எம் உலகமே நீ தான் என்றிருந்தோம்
ஏன் இப்படி நடந்தது?
எம் நினைவிலும் மறக்கமுடியவில்லை!
காந்து! உன் இனிமையான நினைவுகளை
நினைக்கும் போது நிலைகுலையச் செய்யுதடா!
நேற்று போல் இருக்கிறது உன் நெஞ்சகலா அந்நினைவு!
நெஞ்சம் பதைக்கிறது அந்நாளை நினைக்கையிலே
ஏன் எம்மை மறந்தாய் எம் அன்புச் செல்வமே காந்து!
எங்கும் நிழலாய் பின்தொடர்ந்தாய்-இப்போது
பாதிவழி விட்டுவிட்டு பரலோகம் சென்றதுமேன்?
என்னுயிரே ஏங்கி நாம் தவிக்கின்றோம்
மீண்டும் எங்களிடம் திரும்பவும் நீ வந்துவிடு காந்து!

அன்னாரின் 1ஆம் ஆண்டு ஆத்மசாந்திப்பிரார்த்தனை (திவசம்) இன்று (21.07.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக் காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் குறிப்புகொள்கின்றோம்.**

தோற்றம்
24.12.1991

மறைவு
01.08.2024

"அம்பிகைவாசா"
பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

(CS/45562) J-1

என்றும் உன் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்...
உன்பாசமிகு குடும்பத்தினர்
021 226 2317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தாதா’க்களை கைதுசெய்வதற்கு பறக்கவுள்ள பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, ஜுலை 21

வெளிநாடுகளில் பதுங்கி இருந்து இலங்கையில் அடியாள்களை வைத்து போதைப்பொருள் வியாபாரம், கொலை மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்டுவரும் பாதாள உலகக் குழுக்களை கைது செய்து நாட்டுக்குக் கொண்டுவருவதற்காக இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு பொலிஸ் குழுக்கள் செல்லவுள்ளன.

இந்தப் பாதாள உலகக் குழுக்கள் டுபாய், மலேசிய இந்தியா, தாய்லாந்து மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து செயற்படுகின்றன என்று இலங்கை அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்களுள் பலர் அந்த நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காகவும் கைது செய்யப்படாமல் மறைந்துள்ள பாதாள குழுக்களுக்களுடன் தொடர்புடையவர்களின் தகவல்களை வழங்குவதற்காகவுமே இலங்கைப் பொலிஸார் வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ளனர்.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் இலங்கையில் அதிகரித்துள்ளன என்றும் அவை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்றும் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டிவரும் நிலையில் அரசாங்கம் இந்த நடவடிக்கைளை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்குள் பதுங்கி இருந்து குற்றச்செயல்களில் ஈடுபடும் பாதாளக் குழுக்களை மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் இருந்துகொண்டு இங்கு குற்றச்செயல் களைப் புரியும் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் பெரும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-75)

# ஐ.நாவின் பலவீனத்தை பயன்படுத்தி பொறுப்புக்கூறலை முடக்க முயற்சி!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 21

இலங்கை அரசாங்கம் கெட்டித்தனமாக ஐ.நாவுக்குள் உள்ள பலவீனத்தைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் கோரிக்கையை முற்றாக முடக்குவதற்கான யுக்தியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் தொடர்பான பொது நிலைப்பாட்டுக்குத் தமிழ் மக்கள் வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசிய பேரவை, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, சிவில் அமைப்புகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் விடயம் முற்றுமுழுதாக முடிவுக்கு வரும் அபாயம் ஏற்படும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்க காலத்தில் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் அரசாங்கத்தின் அங்கமாகவும், அரசாங்கத்துக்கு அங்கீகாரத்தைத் தேடிக்கொடுக்கும் வகையில் செயற்படும் அளவில் நிலைமை உள்ளது என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தாக இருக்கின்றது.

சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பதிலாக புதிய சுயாதீனக் கட்டமைப்பை ஒருவாக்கி அதன் கூடாக அனைத்து விடயங்களையும் நேர்மையாக முன்னெடுக்கலாம் என்ற போலி நம்பிக்கையை ஐ.நா. ஊடாகக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுகின்றது.

இந்த ஆபத்தை விளங்கியே அனைவரையும் ஒன்றிணைத்து, பிரதானமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் இணைத்து பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். துரதிஷ்டவசமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தீர்மானித்துள்ளது என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய கோரிக்கைக் கடிதம் ஒன்றை நாம் தயாரிக்கவேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி வெளியிட்ட கடிதத்தின் மூலக்கோரிக்கைகளை வலியுறுத்தி, தற்போது தேவையாகவுள்ள மேலதிக விடயங்களையும் உள்ளடக்கி இந்தக் கடிதம் தயாரிக்கப்படும்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் இவைதான் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். ஜெனீவா அமர்வு தொடங்குவதற்கு முன்பாக இந்த கோரிக்கைகளை தவிர்த்து எட்டப்படும் முடிவுகள் பாதிக்கப்படும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது என்ற செய்தியை சர்வதேசத்துக்கு அழுத்தமாகத் தெரிவிப்பதே எமது பிரதான நோக்கமாக இருக்கவேண்டும் - என்றார். (எ-26)

## வேலை...

சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தனவை பொலிஸ் சேவையிலிருந்து நீக்கியமை மட்டும் போதாது. அவருக்கு எதிராக வழக்குத் தொடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கத்தோலிக்க ஆயர் பேரவையின் பேச்சாளர் ஜுட் கிறிசாந்த பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமது பொறுப்பை நிறைவேற்றத் தவறிய நிலந்த ஜயவர்த்தனவை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும் என்று நாம் 6 வருடங்களாக மூன்று அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அவற்றை அந்த அரசாங்கங்கள் கவனத்தில் எடுக்கவில்லை. மாறாக அவரை 6 ஆண்டுகள் சேவையில் தொடர்ந்தும் வைத்திருந்தன. இது பாரதூரமான தவறாகும்.

தற்போது நிலந்த ஜயவர்த்தன பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். மூன்று அரசாங்கங்கள் செய்யாத விடயத்தை உரிய விசாரணைகளின் பிரகாரம் செய்த ஜனாதிபதிக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

நிலந்த ஜயவர்த்தனவை சேவையில் இருந்து நீக்கியமை மட்டும் போதாது. அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் இந்தப் பரிந்துரை உள்ளது. இந்த விடயத்தை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கப் பணிப்பாளர் ஆகியோரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

நிலந்த ஜயவர்த்தனவை சட்டத்தின் முன் நிறுத்தி விசாரணைகளை முன்னெடுத்தால், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக அவர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தினாரா என்பது தெரியவரும். அதன்மூலம் தாக்குதல் சம்பவத்தின் அடி, முடி தெரியவரக்கூடும் - என்றார். (அ-எ-44)

## சம்பூரிலும்...

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் 'மக்' எனப்படும் மிதிவெடி அகற்றும் நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை மிதிவெடி அகற்றும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

நேற்று அந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையின்போது மனித என்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அது தொடர்பாக நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சிதைவடைந்த மண்டையோடு, கால் என்புப் பகுதிகள் என்பனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்கு வந்த மூதூர் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.எம்.நஸ்லீம் அந்த இடத்தை பார்வையிட்டார். மிதிவெடி அகற்றும் பணியை எதிர்வரும் 23ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கவும் உத்தரவிட்டார்.

என்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியை நீதிபதியின் முன்னிலையில் அரச பகுப்பாய்வுத் திணைக்களம், சட்ட மருத்துவ அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் ஆகிய திணைக்களங்களின் பிரசன்னத்துடன் நாளைமறுதினம் புதன்கிழமை அகழ்வதற்கும் உத்தரவிட்டுள்ளார்.

சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியை அண்மித்த பகுதியிலேயே (சுமார் 40 மீற்றர் தூரத்தில்) இந்த மனித என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (அ-எ-50)

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 02 . 1947



இறப்பு 20 . 07 . 2025

**மார்ஷல் அருளானந்தம் (அரியராசா)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்ஷல் அருளானந்தம் அவர்கள் நேற்று (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்ஷல்-றோசலீன் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிலிப் அந்தோனிப்பிள்ளை (ஐயா அண்ணே)-செபமாலை தம்பதியின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற வயலற் கொன்சி அவர்களின் அன்புக் கணவரும், நிரேஷினி (பிரான்ஸ்), அன்ரன் ஜெறி நிரோஷன் (அவுஸ்திரேலியா), யூட் நிரஞ்சன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், டினோஷன் (பிரான்ஸ்), தியணி பிறிஸ்கா (அவுஸ்திரேலியா), மேரி லாவண்யா (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டறின், ஜொயல், இசபெல்லா, கபிரியல்லா, அதிஷ்டா, அட்விக் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான லோறன்ஸ், கிளிபேட், ஸ்ரெலா (சந்திரா) மற்றும் அன்ரனி (நெல்சன்), புளோரா (பேபி), கிப்பொலிட்டா (சறோ), கெலன் ஜெசி (றாஜினி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான G.S மரியதாசன், எட்வேட், ஜசிந்தா, மாகிறோட் லூசியா மற்றும் மகேஸ்வரி, ரஞ்சினி, J.A மரியதாசன், திரேசா (கனி), அந்தோனிப்பிள்ளை, லயனல் கொன்ஸ்டன்டைன் (நெதர்லாந்து), மேரி அஞ்சலீனா (U.K), ஐடா காமலிற்றா (வவுனியா), மேரி ஜெனிற்றா (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித தெரேசாள் ஆலயத்தில் நாளை (22.07.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

73, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 254 6060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்...

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த சிப்பாய் ஒருவர் முகாம் உயர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
கிளிநொச்சி, இரணைமடுப் பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாம் ஒன்றைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரே நேற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் 20 கிராம் 320 மில்லிக் கிராம் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கிளிநொச்சிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-எ-113)

## செம்மணிப்...

புடன் அகழ்வு நடவடிக்கைகள் இரு கட்டங்களாக நடைபெற்றிருந்தன.
இந்த அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும், பேராசிரியருமான ராஜ் சோமதேவவின் தலைமையில் நடைபெற்று வருகின்றன. அகழ்வு நடவடிக்கைகளின்போது சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் ஆகியோரும் பிரசன்னமாகி வருகின்றனர்.
இதுவரை நடந்த அகழ்வு நடவடிக்கைகளில் 65 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் என்புக்கூடுகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.
சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பாக இறுதியாக நடந்த நீதிமன்ற வழக்கில் இதுவரை அகழ்வு நடவடிக்கைகளில் மீட்கப்பட்ட என்புக்கூடுகளின் பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தனது அறிக்கையில் "குற்றச் செயல்கள் இடம்பெற்றிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மனித உரிமை மீறல்கள் நடந்திருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன" என்று குறிப்பிட்டிருந்தார். அங்கு மீட்கப்பட்டிருந்த என்புக் கூட்டுத் தொகுதி ஒன்று 4 அல்லது 5 வயதுடைய பெண் பிள்ளையினது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.
இந்நிலையில், செம்மணி சித்துப்பாத்தி மயான மனிதப்புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவக்கையின் இரண்டாம் கட்டப் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. (அ-எ-26)

## வழக்கைக்...

செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகளின் அடுத்த கட்டப் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இன்று அகழ்வு நடவடிக்கைகளின்போது குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பிரசன்னமாவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
செம்மணி, சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி தொடர்பான விசாரணைகள் இதுவரை யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த விசாரணைகளை மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமையவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
சித்துப்பாத்தி மனிதப்புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு இன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. இன்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அகழ்வு நடவடிக்கைகளின்போது பிரசன்னமாவார்கள் என்று தெரியவருகின்றது. (அ-எ-26)

## பொது...

மிடப்பட்டுள்ளது. பொது எதிரணி என்ற கட்டமைப்புக்குள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமான வகிபாகத்தில் இருப்பார் என்று தெரியவருகின்றது.
நாடாளுமன்றத்துக்குள்ளும், அதற்கு வெளியிலும் தேசிய முக்கியத்துவமிக்க விடயங்களின்போது ஐக்கிய மக்கள் கூட்டணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணக்கத்துடன் செயற்படுகின்றன. தேசிய சுதந்திர முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்டவை நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கின்றன.
இந்தப் பின்னணியில் பொதுவேலைத் திட்டத்தின் கீழ் எதிரணிகளை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி இடம்பெற்று, அதற்குரிய பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களையும் இந்தக் கூட்டுக்குள் உள்வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் கடும் போக்குடைய சிங்களத் தேசியவாதக் கட்சிகள், அமைப்புகள் என்பனவும் பொது எதிரணிக் கட்டமைப்புக்குள் வரவுள்ளதால், தமிழ்த் தேசியக் கட்சிகள் இதற்கு இணங்குமா என்பது தெரியவரவில்லை.
ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித்தின் தலைமைப் பதவிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், பொது எதிரணியில் தலைமைத்துவ சபையொன்றே உருவாக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. (அ-எ-44)

## தாக்குதலைத்...

தொடர்பில் கடமை தவறினார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையில், அவர் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றங்களிலும் அவர் குற்றவாளி என்பதைக் கண்டறிந்ததை அடுத்து அவரை உடனடியாகப் பொலிஸ் சேவையில் இருந்து நீக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடந்த பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக கடமை தவறினார் என்று நிலந்த குற்றம் சாட்டப்பட்டிருந்தார். அதையடுத்து அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டது.
முறையான ஒழுங்கு விசாரணையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தீர்ப்பாயத்தால் 2025.07.04 அன்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறையான ஒழுங்கு விசாரணை அறிக்கை, முறைப்பாட்டைக் கையாளும் அதிகாரியின் அறிக்கை, பாதுகாப்பு அதிகாரியின் அறிக்கை மற்றும் அந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆய்வு செய்தது.
முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கையின்படி, குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன குற்றவாளி எனக் கண்டறியப்பட்டுள்ளது.
மேற்கூறிய குற்றச்சாட்டுகள், நிறுவனக் குறியீட்டின் வகை II இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொது அதிகாரிகளால் செய்யக்கூடிய குற்றங்கள் தொடர்பான முதல் அட்டவணையின் கீழ் வரும் குற்றங்கள் ஆகும். அதன்படி 2025.07.17 அன்று கூடிய தேசிய பொலிஸ் ஆணைக்குழு மேற்குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் நிலந்த ஜயவர்த்தனவே குற்றவாளி எனட் தீர்மானித்தது.
அதன்படி, அவர் செய்த குற்றத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு 2025.07.17 அன்று நடைபெற்ற தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமர்வில், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தனவை பொலிஸ் சேவையிலிருந்து நீக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## பாழடைந்த...

மருத்துவமனையில் சேர்த்தபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## உறங்கச்...

மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த மாசல் அருளானந்தம் (வயது-76) என்பவரே உயிரிழந்தவராவார்.
நேற்றுமுன்தினம் உணவருந்திவிட்டு வீட்டில் உறங்கச் சென்றவர் நேற்றுக் காலை சடலமாகக் காணப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-எ-26)

## மூளாயில்...

நேற்றுமுன்தினம் இரு நபர்களுக்கு இடையே மோதல் சம்பவம் நடந்த நிலையில், இந்தப் பிரச்சினை பொலிஸ் நிலையம்வரை சென்றிருந்தது. இந்தப் பிரச்சினையின் தொடர்ச்சியாக நேற்று இரு நபர்களின் ஊரவர்கள் இணைந்து ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டுள்ளனர்.
இதன்போது ஒரு மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டதுடன், இன்னொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டிருந்தது. சம்பவ இடத்துக்குச் சென்ற வட்டுக்கோட்டைப் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்த முயற்சித்தபோது, பொலிஸார் மீதும் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதையடுத்து பொலிஸார் எச்சரிக்கைத் துப்பாக்கிச் சூடு நடத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்தை அடுத்து மூளாயில் நேற்று பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (அ-எ-26-27)

## வீட்டாரை...

பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த 17ஆம் திகதி நடந்துள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## நிலந்தவைத்...

நிலந்த ஜயவர்த்தனவுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காத முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் நீதிமன்றத்துக்கு முன் கொண்டுவர வேண்டும் என்று கத்தோலிக்க ஆயர்பேரவையின் பேச்சாளர் ஜூட் கிறிசாந்த பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நிலந்த ஜயவர்த்தன தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரையை முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் செயற்படுத்தவில்லை. மாறாக ஊழல் மிகு அந்த அதிகாரியை பதவியில் தக்கவைத்துக்கொண்டனர். இது தொடர்பிலும் எமக்கு சந்தேகம் எழுகின்றது.
தங்களுக்கு மறைக்க வேண்டிய ஒரு விடயம் இருப்பதாலேயே மேற்படி மூன்று ஜனாதிபதிகளும் நிலந்த ஜயவர்த்தனவை அந்தப் பதவியில் தக்கவைத்திருக்கக் கூடும். அதனால்தான் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இந்த அதிகாரி மூலம் அவர்கள் மறைக்க முற்பட்ட தகவல் என்னவென்பதையும் தற்போது தேடவேண்டும்.
மைத்திரி, கோத்தா, ரணில் ஆகியோரையும் நீதிமன்றத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோருகின்றோம். எதற்காக இந்த அதிகாரி பாதுகாக்கப்பட்டார் என்பது கண்டறியப்பட வேண்டும். நீதிமன்றம் ஊடாக இதற்குரிய நடவடிக்கை இடம்பெற வேண்டும். பதவிநிலை முக்கியம் அல்ல. தவறிழைத்திருந்தால் நிச்சயம் தண்டனையை எதிர்கொள்ளவேண்டும் - என்றார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதிய வர்த்தமானிக்கமைய

# கொழும்பு துறைமுக நகரத்துக்கு 35 ஆண்டுகளுக்கு வரிவிலக்கு

**கொழும்பு, ஜூலை 21**

**கொழும்பு துறைமுக நகரமான போர்ட் சிற்றியின் புதிய திட்டங்களுக்காக, முதன்மை வணிகங்களுக்கான மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த 4 மதிப்புமிக்க நிலத் துண்டுகளில், நான்கு தனியார் நிறுவனங்களுக்கு தலா 35 ஆண்டுகளுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கு உள்நாட்டு வருவாய்ச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.**

இந்த வரிச் சலுகைகள் 2060 வரை வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதன்படி, கொழும்பு துறைமுக நகரம், பொருளாதார ஆணையத்தின் பரிந்துரைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பின்னர் இந்த வரிச் சலுகைகள் குறித்த 4 நிறுவனங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிறுவனங்கள் முதல் 25 ஆண்டுகளுக்கு அனைத்து வருமான வரிகளிலிருந்தும், இலாபங்கள் மற்றும் விநியோகிக்கப்பட்ட ஈவுத்தொகைகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும், மேலும் குறிப்பிட்ட நிறுத்திவைக்கும் வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

அந்த 25 ஆண்டுகள் முடிந்த பிறகு, அவர்கள் மேலும் 10 ஆண்டுகளுக்கு இறக்குமதி வரி விகிதத்தில் 50 சதவீத ஊக்கத்தொகையைப் பெறுவார்கள். இருப்பினும், பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் கீழ் இதற்கு எந்த விலக்கு அல்லது ஊக்கத்தொகையும் வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

# யாழ். மாவட்டத்தில் கனேடியத் தூதரகம்

## தூதுவர் எரிக் வோல்ஷிடம் கோரிக்கை

இலங்கைக்கான கனேடியத் தூதரகமொன்றை, யாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜாவுக்கும், இலங்கைக்கான கனேடியர் தூதுவர் எரிக் வோல்ஷுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பிலேயே, இலங்கைக்கான கனேடியத் துணைத் தூதரகமொன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்குமாறு யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் கோரியுள்ளார். யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் கோரிக்கையைக் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் ஏற்றுக்கொண்டதுடன், இந்த விடயத்தில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். யாழ்ப்பாணம் மேயரின் கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்ற வாக்குறுதியையும் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலும், வடமாகாணத்திலும் உள்ள மக்களுக்குக் கனேடியத் தூதரகத்துடன் தொடர்புடைய அலுவல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இதற்காக அவர்கள் பெரும் நிதிச்செல வுக்கு மத்தியில் கொழும்புக்குச் செல்ல வேண்டிய நிலைமையே தற்போது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-26-66)

## பனையில் தூக்கிட்டு உயிரிழப்பு

பனை மரத்தில் தூக்கிட்டுத் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட் டுள்ளார். இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறை பொலிகண்டியில் நடந்துள்ளது.54 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சுகவீனம் காரணமாக இவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டார்.

(அ-எ-26)

**சுத்திகரிப்பு பணியாளர் தேவை**



யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு
**சுத்திகரிப்புப் பணியாளர் தேவை.**
(ஆண்/பெண்)
பின்வரும் முகவரிக்கு
21.07.2025. 22.07.2025
ஆகிய தினங்களில்
மு.ப 9.00 - பி.ப 02.00 வரை
நேரில் சமுகம் தரவும்.
**உதயன்**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**பெண்களுக்கான அறைகள் உண்டு**
**யாழ் நகரில் பெண்களுக்கான தங்குமிடம் சகல வசதிகளுடன் உண்டு.**
071 220 0008, 077 040 6374

**வேலையாட்கள் தேவை**
தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
**சம்பளம் :- 70,000/-**
**Location :- S.A.W & Sons, Hambantota**
தொடர்புகளுக்கு:
**077 480 3379**
(CS 58912) E

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:- Whatsapp:- **0044 740 537 3526**
(CS/58593) J-1

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.07.1938 | 18.07.2025 |

## கைலாசப்பிள்ளை சோமசுந்தரம் (சோமு)

**(முன்னாள் யாழ் மாநகர சபை ஆராய்ச்சி உத்தியோகத்தர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசப்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள் கடந்த 18.07.2025 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் (சொர்ணம்) அன்புக் கணவரும், திருக்குமார் (வவி) (முன்னாள் உத்தியோகத்தர் - பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்), விஜயகுமார் (UK), வினோதினி (UK) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், கமலராணி (குட்டி), விஜயலட்சுமி (UK), சிறிதரன் (UK), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம், இரத்தினம் மற்றும் சின்னம்மா, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, சோமசுந்தரம், செல்லையா, சண்முகலிங்கம், ஏரம்பு, செல்லம்மா, இராசம்மா, இராசையா, சரஸ்வதிப்பிள்ளை, கிருஷ்ணசாமி, சிக்கிட்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யசிதரன், விதுர்ஷா, சுவஸ்திகா, டிலான், டினோஜ், டினோயா, துவாரகன், கீர்த்திகன், துஷியா, ஆர்த்தி ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2025) திங்கட்கிழமை இல 50/15, ஆள்காட்டி வீதி, அரியாலையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 01 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**50/15 ஆள்காட்டி வீதி, அரியாலை**

**தொடர்பு: மகன் (திருக்குமார்) 077 245 8790**

(CS 58910) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org